செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

விசேஷ பதிப்பு

இல. 728 | 1969 மே 27 செவ்வாய்க் கிழமை | ★★★ | விலை சதம் 5

University of Ja... REC... Periodic... Library

# விண்வெளி வீரர்கள் தலைகீழாக விழுந்தனர்!

**பிரின்ஸ்டன், (பசுபிக்) மே 26**

**சந்திர மண்டல யாத்திரையை முடித்துக் கொண்டு வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பிய அமெரிக்க விண்வெளிக்கப்பல் பசுபிக் சமுத்திரத்தில் தலைகீழாக விழுந்தது.**

சந்திர மண்டல யாத்திரையில் புதிய சகாப்தமொன்றை உருவாக்கிய அமெரிக்க விண்வெளி வீரர்கள், திட்டமிட்டப்படி இன்று பத்திரமாக பூமியை வந்தடைந்தனர்.

பசுபிக் கடலில் வந்திறங்கிய மூன்று விண்வெளி வீரர்களையும் ஹெலிகாப்டர் ஒன்று கடலில் இருந்து உடனடியாக மீட்டது. மீட்கப்பட்ட மூன்று வீரர்களும் பசுபிக் கடலில் தயாராக இருந்த "பிரின்ஸ்டன்" என்ற கப்பலுக்கு அந்த ஹெலிகாப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

எட்டு நாட்களுக்கு முன்னர் தமது விண்வெளிப் பிரயாணத்தை ஆரம்பித்த மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களும் கடந்த புதன்கிழமை சந்திர மண்டலத்தில் பிரவேசித்து மனிதன் முன் எப்போதும் செல்லாதவாறு சந்திரனுக்கு மிக அண்மையில் (சுமார் 8 மைல் தொலைவில்) சென்று சந்திரனை வலம் வந்தனர்.


மணி வடிவிலான விண்வெளிக் கப்பல் தலைகீழாக பசுபிக் கடலில் விழுந்தது. விண்வெளி வீரர்களை மீட்க கடலில் காத்திருந்த "பிரின்ஸ்டன்" கப்பலுக்கு மூன்று மைல் தூரத்திலேயே விண்வெளிக் கப்பல் கடலில் விழுந்தது.

கேப் கெனடியிலிருந்து பிரயாணம் ஆரம்பித்த 192 மணி மூன்று நிமிட நேரத்தின் பின்னர் மூன்று வீரர்களும் திரும்பவும் பூமியை வந்தடைந்தனர். (ர)

## 'நீங்கள் ஓய்வெடுங்கள்!'

கடலிலிருந்து விண்வெளி வீரர்களை மீட்க ஹெலிகாப்டர் அவர்களுக்கு மேலாகப் பறந்தபோது "அமைதியாக இருங்கள், நாம் சுகமே இருக்கின்றோம்" என விண்வெளி வீரர்கள் கூறினர்.

கடலில் மிதந்து கொண்டிருந்த விண்வெளிக் கப்பலினுள் இருக்கும் அவர்களிடம் அவர்களின் உடல் நிலைபற்றி கேட்கப்பட்ட போது, "வைத்திய அதிகாரியை ஓய்வெடுக்கச் சொல்லுங்கள். நாம் சுகமாக இருக்கின்றோம்" என்று விண்வெளி வீரர்கள் அமைதியான, தெளிவான குரலில் பதிலளித்தனர். (ர)



ஆங்கில திரைப்பட நடிகையான டயனுடோர்ஸ் "லேஸ்" துணியிலான உடை அணிந்திருக்கிறார்.

## பச்சிளம் சிசுக்கள் நீரில் மூழ்கின!

மாத்தறை மே 26

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பச்சிளம் பாலகர்கள் வெள்ளத்தில் விழுந்து நீரில் அடித்துச் செல்லப்பட்ட நெஞ்சை உருக்கும் சம்பவமொன்று இப்பகுதியில் நடந்துள்ளது.

மாத்தறை, ஹித்தெட்டிய மேற்கைச் சேர்ந்த மூன்று வயதுடைய சுசன்தா ஸ்ரீயானி, ஒன்பது மாத வயதுடைய சுஜீவ குமார ஆகிய குழந்தைகளே இவ்வாறு மரணமாகின.

இக் குழந்தைகளின் தாய் இரு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு வேறு நான்கு பிள்ளைகளுடன் ஹித்தெட்டியாவிலிருந்து வெவஹமன்துவைக்கு வெள்ளத்தைக் கடந்து செல்லும்போது ஒரு குழந்தை வெள்ளத்தில் விழுந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டது. மூன்று வயது குழந்தை வெள்ளத்தில் அடித்துச் செல்வதைக் கண்ட தாய் அதைக் காப்பாற்ற கையிலிருக்கும் பச்சிளம் குழந்தையுடன் வெள்ளத்தில் குதித்துள்ளார். அப்போது நீரில் அடித்துச் செல்லப்பட்ட குழந்தையும் கையிலிருந்த குழந்தையும் வெள்ளத்தில் சிக்கி மாண்டன.

இப்பரிதாபகரச் சம்பவத்தைக் கண்ட பக்கத்திலிருந்த ஒருவர் உடனடியாக இரு குழந்தைகளையும் வெள்ளத்திலிருந்து மீட்டு மாத்தறை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்த போதிலும் அக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற முடியாது போய்விட்டது. (ர)

**மீனாட்சி**



ஆனியிலும் ஆசிரியர்கள் இடமாற்றமா எவ்வகையிலும் ஹானிசெய்வது என்றே கல்வி அமைச்சரதும் தீர்மானமா?

## இருவார பங்கீட்டரிசித் திட்டம் விரிவுபடுத்தப்படும்

கொழும்பு மாவட்டத்தில் தற்போது அமுலில் இருக்கும் இருவார கால பங்கீட்டரிசியை ஒரே தடவையில் வழங்கும் திட்டத்தை நாடு பூராவிலும் விரிவுபடுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இரு வார கால பங்கீட்டரிசி விநியோக முறை கொழும்பு மாவட்டத்தில் திருப்திகரமாக அமுல் செய்யப்படுவதால் அது நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி கமிஷனர் சிபார்சு செய்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், கடைகள் ஆகியவை இடையே கூட்டுறவு அபிவிருத்திப் பகுதியினால் நடத்தப்பட்ட விசாரணையில் 16 கூட்டுறவுச் சங்கங்களில் 12 சங்கங்கள் அத்திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேஷியாவில் மீண்டும் கொந்தளிப்பு நிலை

# சீனர் கடைகள் மூன்றும் இருவீடுகளும் தீக்கிரை

### படைக்கு மறைவிலிருந்து துப்பாக்கிச் சூடு!

கோலாலம்பூர், மே 26

சீனர்களுக்குச் சொந்தமான மூன்று கடைகளும், மலாயர்களுக்குச் சொந்தமான இரு வீடுகளும் தீவைக்கப்பட்டதை அடுத்து மலேஷியாவில் மீண்டும் இனக்கலவரமும் கொந்தளிப்பான நிலையும் எழுந்துள்ளன.

இராணுவ வீரர்கள் மீது மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

நேற்று புதிதாக 354 பேர் கைது செய்யப்பட்டனர். இத்தோடு கைது செயப்பட்டவர்கள் தொகை 4,481 என பொலீஸார் அறிவிக்கின்றனர். காடையர்கள், இரகசிய சேவைகளைச் சேர்ந்தோர், அரசியல்வாதிகள் உட்பட பலர் கைது செய்யப்பட்டோரில் இடம் பெறுகின்றனர்.

பாதுகாப்புப் படையினரை சிலர் மறைந்திருந்து சுட்டதாக கூறிய உதவிப் பிரதமர் ஜனுப் துன் அப்துல் ரஸாக் இதைப்பற்றி வேறு விபரங்களைக் கூறவில்லை. பாதுகாப்புப் படையினருக்குத் தொல்லை தருவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறினார்.

நேற்று இரவு பூராவும் கோலாலம்பூர் நகர தெருக்களில் அடிக்கடி துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. ஆனால் இதைப் பற்றி பொலீஸார் எவ்விதமான விளக்கமும் கூறவில்லை.

இவ்வளவு கலவரங்கள் ஏற்பட்ட பின்னரும் தளர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்னும் அதே அளவிலேயே தொண்டு நடத்தப்படுகிறது. கலவரத்தின் ஆரம்பத்தில் 167 பேர் கொல்லப்பட்டதாகவும், 330 பேர் படுகாயமடைந்ததாகவும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

#### இரு சஞ்சிகைகள் தடை

கலவரத்தின் உண்மையான நிலையை எடுத்துக் கூறவில்லை என்ற காரணத்தினால் இரு வெளிநாட்டு சஞ்சிகைகளுக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. வெளிநாட்டுப் பத்திரிகைகள் மலேஷிய நிலையை பிழையாக எடுத்துக் காட்டியிருப்பதாக தகவல் மந்திரி ஜனுப் அபுசமா கூறினார். பல்வேறு இன மக்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த பத்திரிகைகள் முன்வரவில்லை எனவும் அவர் கூறினார்.

திரு. கோஹொக்குவான் என்ற எதிர்க்கட்சி எம். பி. இனக்கலவரம் பற்றி கூறுகையில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிலரை அரசாங்கம் கைது செய்ததைப் பலமாகக் கண்டித்தார். திரு. லிம்கிட் சியாங்கை அரசாங்கம் கைது செய்ததைப் பற்றியே இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசியல் வாதிகளைக் கைது செய்ததற்கான காரணத்தை அரசாங்கம் பொது மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் எனவும் அவர் சொன்னார்.

#### முக்கிய தேவை

மாமூல் நிலைமை திரும்பியவுடன் ஜனநாயக ஆட்சியை உடன் அமுல் செய்வது நாட்டு மக்களின் முக்கிய தேவை எனவும் திரு. குவான் சொன்னார். பிரிட்டிஷார் மலேஷியாவை ஆண்ட காலத்தில் கம்யூனிஸ்ட் கலவரங்கள் நடந்தன. ஆனால், அவ்வளவு கலவரங்களுக்கு இடையிலும் பிரிட்டிஷார் பொதுத் தேர்தலை நடத்தியதாக அவர் மேலும் சொன்னார்.

கலவரத்துக்குப் பின் மலேஷியாவில் பாராளுமன்றம் தடை செய்யப்பட்டுள்ளது. "தேசிய இயக்கு சபை" என்ற சபை உருவாக்கப்பட்டு அச் சபையிடம் நாட்டை ஆளும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. (ல)

### ஆஸ்பத்திரி கியூ வரிசையில் 9 வயது சிறுவன் மரணம்

பதுளை, மே 26

ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் மரணமடைந்தது சம்பந்தமாக விசாரணை நடாத்திய பதுளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. பி. பி. இரத்னயக்கா (ஜே.பி.) சிறுவனின் மரணத்துக்கு பெற்றோரைக் கண்டித்தார்.

பதுளை வேவல்ஹின்னையைச் சேர்ந்த பி. விஜேராஜா என்ற சிறுவன் பதுளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக கியூ வரிசையில் நின்ற போது மரணமானன் என்று கூறப்படுகிறது.

சிறுவனின் தந்தை எம். பெருமாள் என்பவர் மரண விசாரணை அதிகாரி முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"காலஞ் சென்றவர் சில தினங்களுக்கு முன்னர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். அதை பாரதூரமாக நான் கருதவில்லை. சம்பவ தினம் காலஞ் சென்றவருக்கு மீண்டும் காய்ச்சல் வந்தது. அவரை பதுளை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தேன். டாக்டரிடம் காட்டுவதற்கு கியூவில் நின்ற போது அவர் மரணமானார்."

பெற்றோர்கள் கவலையீனமாக நடந்து கொண்டதாக கண்டித்த மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணம் என்று தீர்ப்பு அளித்தார். (ல-5)

### கைதிகளில் அநுதாபமாய் கைதியான நூதன சம்பவம்

திருமலை, மே 26

திருமலை நீதிமன்றக் கைதி கூண்டில் இருந்த சந்தேக நபர்களுக்கு ஆக அனுதாபப்பட்ட ஒருவர், அதே கைதிக் கூண்டில் அடைக்கப்பட்ட சுவையான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று முன்தினம் காலை திருமலை நீதிமன்றம் ஆரம்பமாவதற்கு முன்னர், விளக்கமறியலில் இருந்து சந்தேக நபர்கள் சிலரை சில வழக்குகளின் விசாரணைக்காக பிஸ்கால் ஊழியர்கள் நீதிமன்றத்தில் உள்ள கைதிக் கூண்டில் அடைத்து இருந்தனர்.

இச்சமயத்தில் வெளியே நின்ற ஒருவர் கைதிக் கூண்டில் இருந்த சந்தேக நபர்களுக்கு "தேநீர் கொடுப்பது இல்லையா. சிகரட் கொடுப்பதில்லையா, பீடி கொடுப்பது இல்லையா" என்று எல்லாம் பிஸ்கால் ஊழியர் ஒருவரிடம் வாதிட்டுக் கொண்டு இருந்தார்.

பிஸ்கால் ஊழியரும் உளறுபவனே என்ன செய்யலாம் என்ற எண்ணத்தில் ஒரு காதால் கேட்டு மறுகாதால் விட்ட வண்ணம் இருந்தார்.

திடீர் என்று பேசிக் கொண்டு இருந்த நபர், ஒரு கையில் ஒரு கட்டு பீடியுடன் கோர்ட்டினுள் நுழைந்தாராம். பிஸ்கால் ஊழியர்கள் இதென்ன வம்பாய்ப் போய்விட்டதே என்று பதற அந்த நபர் தனது கையில் இருந்த பீடிக்கட்டை கைதிக் கூண்டினுள் எறிந்தாராம்.

உடனடியாக கைதிக் கூண்டைத் திறந்து பீடிக் கட்டை எடுத்த பிஸ்கால் ஊழியர்கள், பீடிக் கட்டை எறிந்துவிட்டு வெளியே நின்ற அந்த நபரையும் பிடித்து நீதிமன்ற பொலீஸ் சார்ஜண்டிடம் ஒப்படைக்கத் தவறவில்லை.

நீதவான் வழக்கு விசாரணைகளை ஆரம்பித்ததுதான் தாமதம். சம்பந்தப்பட்ட சந்தேக நபர் நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு இட்ட நீதவான் மேல் விசாரணையை ஜூன் 24 க்கு ஒத்தி வைத்தார். (287)

### கொள்ளை லாப வழக்கில் வியாபாரிகள்

எஸ். சண்முகநாதன், பி. சிவரத்தினம் ஆகிய இரு வியாபாரிகள் சின்ன வெங்காய விற்பனையில் கொள்ளை லாபம் அடித்ததாக நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரும் குற்றத்தை மறுக்கவே நீதிபதி திரு. நெத்தசிங்க அவர்களைத் தலா 200 ரூபா பிணையில் செல்லும்படி உத்தரவிட்டார். (ல)

### மாலுமிகளும் பொலீஸாரும் பயங்கரமான மோதல்

திருகோணமலை மே 26

கஞ்சா இருந்ததாகக் கூறப்படும் பார்சல் ஒன்று குறித்து வெளி நாட்டு மாலுமிகள் சிலருக்கும் திருமலைப் பொலீசாருக்கும் இடையே பயங்கர மோதல் ஒன்று இடம் பெற்றது.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

சம்பவ தினம் இரவு 7 மணியிருக்கும். திருமலையின் ஒரு கோடியில் உள்ள வெளி நாட்டு ஹோட்டல் ஒன்றின் முன்னர் சில வெளி நாட்டு மாலுமிகள் வந்து கொண்டு இருந்தனர். அவர்களில் ஒருவரின் கையில் ஒரு பார்சல் இருந்தது.

அப்பக்கத்தால் வந்த பொலீஸ் கான்ஸ்டபிள் இருவருக்கு பார்சல் குறித்துச் சந்தேகம்.

மாலுமிகளைப் பொலீசார் நெருங்கினர். அவ்வளவுதான் கையில் இருந்த பார்சல் அருகில் நின்ற டாக்ஸி ஒன்றின் கீழ் உருண்டு சென்றது.

பொலீசார் மாலுமிகளைப் பார்த்து "உங்கள் பார்சல் தானே அது" என்றனர். "அது எங்கள் பார்சல் இல்லை" என்றனர் மாலுமிகள்.

இதைத் தொடர்ந்து மாலுமிகளும் பொலீசாரும் கைகலந்தனர். நீண்டு வளர்ந்து இருந்த மாலுமிகளும் பொலீசாரும் மோதியது பயங்கரமானதாக இருந்தது. இறுதியில் பார்சலையும் எடுத்துக் கொண்டு பொலீஸ் நிலையம் சென்றனர் பொலீசார்.

மாலுமிகளோ அருகில் இருந்த ஹோட்டல் ஒன்றில் நுழைந்தனர். (ல-287)

### ரயில்வே குற்றங்கள் அதிகரிப்பு

கடந்த பெப்ரவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்தில் ரயில்வே குற்றங்கள் அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மேற் கூறிய நாட்களில் மட்டும் 1,082 பேர் டிக்கட் இல்லாமல் சென்று பிடிபட்டுள்ளனர். இவற்றில் கொழும்பிலும் அனுராதபுரத்திலுமே அதிகமானோர் ...பட்டுள்ளனர். (ல)

### 77 வயது மூதாட்டி கடலில் மூழ்கினார்

ஊர்காவற்றுறை, மே 26

கடலில் முகம் கழுவிக் கொண்டிருக்கையில் அனலைதீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தையல் அம்மா என்னும் 77 வயது மூதாட்டி கடலில் மூழ்கி மாண்டார்.

மரண விசாரணையில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ல)


### கட்டுப்பாடு, கண்ணியம்

ஒழுங்கு, நன்னடத்தை, கட்டுப்பாடு, கண்ணியம் என்றவைகளைக் கைக்கொள்ளாத எவரும், தனிப்பட்ட முறையிலோ, சமூக வாழ்க்கையிலோ முன்னேற முடியாது. இது உலகம் கண்ட உண்மை; காலம் கண்ட உண்மை. எனினும் இன்று ஒருவகை நாகரிகம் பரவி ஒழுங்கு, நன்னடத்தை என்பவைகளெல்லாம் காற்றில் பறந்து போவதாகவே தோற்றுகின்றது. இன்று சிறுக்அரிவர் தொடக்கம் பல்கலைக் கழகம் வரை இலவசக் கல்வி கிடைக்கின்றது. அந்த இலவசக் கல்வி முறையாகப் போதிக்கப்பட்டால், அன்னையும் பிதாவும் பின்னுக் கிடைஞ்சல், ஆலயம் தொழுவது வேலை மினக்கேடு என்ற ஒருவகை ஈன உணர்ச்சி வாலிபர்கள் மத்தியில் உருவாகுமா? கட்டுப்பாடு, கண்ணியம், ஒழுங்கு, நன்னடத்தை, நற்குணம் முதலியவைகளை வளர்க்காத கல்வியும் ஒரு கல்வியா?

தந்தி



**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

### மாயாஜாலம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினால் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். மற்ற எல்லாவித மந்திரங்களும் எங்களால் செய்யப்படும். இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். அரசாங்க அனுமதிபெற்ற மந்திரவாதி, நீலன் கந்தசாமி, நிட்டம்புவ.

R. 50186


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்குமதி புடவையா, உள்ளூர் உற்பத்தியா?

# சலுசல அதிகாரியால்
# சரியாக கூற முடியவில்லை

## பொப்ளின் விற்க மறுத்த வழக்கில் எதிரிகள் விடுதலை

கண்டி, மே 26

பொப்ளின் துணி விற்க மறுத்ததாக குற்றம் சாட்டி இருவருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கில், கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பிட்ட புடவை உள்நாட்டு உற்பத்தியா வெளிநாட்டு உற்பத்தியா என தனக்கு நிச்சயமாகக் கூற முடியாதென "சலு சல" அதிகாரி ஒருவர், கூறியதைத் தொடர்ந்து எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந் வழக்கில் 18 யார் புடவை கைவசம் இருக்கையில் எட்டுயார் வெள்ளை பொப்ளின் புடவை விற்க மறுத்ததாக நல்லமுத்து டெக்ஸ்டைல்ஸ்ஸைச் சேர்ந்த எஸ். எஸ். பி. நல்லமுத்துபிள்ளை, எம். பி. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

கண்டி நீதிபதி திரு. எப். பி. ஜீ. பெர்ணண்டோ முன் வழக்கு விசாரிக்கப்பட்டது.

விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் எல். ஓ. எச். வனிகசேகர சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:-

"வேறு துணிமணிகள் வாங்காவிட்டால் பொப்ளின் புடவை விற்க முடியாது என, எதிரிகள் விஜேரத்தின என்பவரிடம் கூறி உள்ளனர். விஜேரத்தின எட்டு யார் புடவை கேட்டிருக்கிறார். அது கிடைக்காததினால் என்னிடம் வந்து முறையிட்டார். நான் விஜயரத்தினவை மீண்டும் கடைக்கு அனுப்பி எட்டு யார் புடவை கேட்கும்படி கூறினேன். அவருடன் விலைக் கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் குமர துங் கா வை யும் அனுப்பி வைத்தேன்.

"ரூபா 2-75-க்கு வாங்கிய ஒரு யார் துணியை மட்டுமே தனக்கு விற்றதாகவும், வேறு பொப்ளின் புடவை இல்லை என எதிரிகள் கூறியதாகவும் விஜயரத்தின வந்து என்னிடம் கூறினார். கடையில் வேறு பொப்ளின் இல்லை என இரண்டாவது எதிரி கூறினார். நான் கடையைச் சோதனையிட்டு 18 யார் பொப்ளின் புடவையைக் கைப்பற்றினேன்."

எதிரி தரப்பு வக்கீலர் திரு. மில்டன் உடுராவலையின் குறுக்குக் கேள்விகளுக்குப் பதில் அளித்த சாட்சி கூறியதாவது:-

"குறிப்பிட்ட புடவை இறக்குமதி செய்யப்பட்டதா என கண்டுபிடிக்க நான் எதுவிதமான இரசாயன பரிசோதனைகளையும் நடத்தவில்லை. கடந்த 20 வருட அனுபவத்தில் இறக்குமதி செய்யப்பட்ட புடவைக்கும் உள்ளூர் உற்பத்திப் புடவைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை என்னால் கூற முடியும்."

அடுத்ததாக சாட்சியமளித்த அரசாங்க சலுசல ஸ்தாபனத்தின் விற்பனை மனேஜர் திரு. ஏ. பஸ்தியாம்பிள்ளை கூறியதாவது:-

தன்னிடம் காட்டப்பட்ட புடவை இறக்குமதி செய்யப்பட்டதா என தனக்கு நிச்சயமாகக் கூறமுடியாது. ஒன்றில் அது ஜப்பான் உற்பத்தியாக இருக்கலாம் அல்லது சீன உற்பத்தியாக இருக்கலாம்."

நீதிபதி— "இந்தப் புடவை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதா என உமக்கு நிச்சயமாகக் கூற முடியுமா?"

"புடவையின் கரையில் நீலநிறக் கோடு ஒன்றுக இருக்கிறது. உள்ளூர் உற்பத்திப் புடவைகளில் நான் அவ்வாறான கோடு ஒன்றைக் காணவில்லை."

நீதிபதி— "அப்போ இப் புடவை இறக்குமதி செய்ததென உம்மால் கூற முடியுமா?"

"நிச்சயமாகக் கூற முடியாது."

இக் கட்டத்தில் வழக்கின் விசாரணையை நிறுத்திய நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். (ல)

## பெய் என்றவுடன் பெய்யும் பெருமழை

இலங்கையில் செயற்கை முறையில் மழை பெய்ய வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியா, அமெரிக்காவில் நடப்பதைப் போல் இங்கும் செய்வதற்காக அரசாங்கம் இப்போது வெளி நாட்டு உதவியைக் கோருகிறது.

"கிளவுட் சீடிங்" என்று ஆங்கிலத்தால் கூறப்படும் இம் முறையினால் மேகங்கள் குளிரடைந்து மழைபெய்யும்.

அந்நிய உதவி டைரக்டர் திரு. டேவிட் லூஸிடம் காணி, நீர்ப்பாசன அமைச்சு இதற்கான விபரங்களைக் கோரியுள்ளது.

கோடை காலத்தில் நாட்டில் மழையைப் பெய்விக்க இம் முறை பெரிதும் உதவியாக இருக்குமென தெரிய வருகிறது.

அத்தோடு, நீரினால் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் செயற்கை மழை பேருதவியாக இருக்குமென கூறப்படுகிறது.

## பிரதம மந்திரியை வரவேற்க எகிப்து தயார்

கெய்ரோ, மே 26

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விஜயம் செய்யும் இலங்கைப் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு பெரும் வரவேற்பு அளிக்க இங்கு அரசாங்கம் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையில் நிலவும் நட்புறவையும் நல்லெண்ணத்தையும் எடுத்துக் காட்டும் விசேஷ மலரொன்றை பிரதமர் விஜயம் செய்யும் தினத்தில் வெளியிட எகிப்தின் "அல் அஹ்ரம்" பத்திரிகை ஏற்பாடு செய்துள்ளது. (ர)

## புதிய இருதயத்துடன் இரண்டாவது பிறந்த தினம்

கேப்டவுன், மே 26

இருதய மாற்று நோயாளியான டாக்டர் பிளேபேர்க் நேற்றிரவு தனது 60 வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். அத்தோடு புதிய இருதயத்துடன் இவர் கொண்டாடும் இரண்டாவது பிறந்ததினம் இதுவாம்.

இரண்டு வருடங்களுக்கு முன் தான் இன்று உயிருடன் வாழப் போவதாக டாக்டர் பிளேபேர்க் கனவிலும் நினைக்கவில்லை என திருமதி ஐலீன் பிளேபேர்க் பத்திரிகையாளரிடம் கூறினார்.

தனது இல்லத்தில் நெருங்கிய உறவினர்களுக்கும் சில டாக்டர்களுக்கும் விருந்துபசாரம் அளித்த டாக்டர் பிளேபேர்க் "சேம் பேன்ஞ்" என்னும் மதுபானம் அருந்தினார்.

இவருக்கு புதிய இருதயத்தைச் செலுத்திய பேராசிரியர் கிறிஸ்டியன் பார்னட் வெளிநாடு சென்றிருந்ததால் இவ்வைபவத்தில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. (ல)

## இரவில் ரோட்டு சுற்றிய இளம் பெண்ணுக்கு சிறை

"உமது வாழ்க்கையைப் பார்த்தால் நீர் நகரத்தை விட்டு உமது சொந்தக் கிராமத்துக்கு சென்று வசிக்கமாட்டீர் போல் தெரிகிறது" என்று ஓர் இளம் பெண்ணைப் பார்த்து கொழும்பு மாநகர நீதிபதி திரு. சி. பி. வலகம்பாய கூறினார்.

தக்க காரணம் இல்லாமல் மருதானை வீதிகளில் இரவில் தனியாக உலாவித் திரிந்ததாக திஸாநாயக்க முதியான்சலாகே பொடிநோனா என்ற இப்பெண் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். இதே போன்ற குற்றங்களுக்கு முன்னர் ஐந்து முறை தான் தண்டிக்கப்பட்டிருப்பதாக இப்பெண் ஒத்துக் கொண்டாள்.

தான் முன்னர் இப்பெண்ணை தனது சொந்தக் கிராமத்துக்குத் திரும்பும்படி கூறியதாகவும், இன்னொரு முறை இரவில் ரோட்டுச் சுற்றியலைய வேண்டாமென எச்சரித்ததாகவும் குறிப்பிட்ட நீதிபதி, இந்த இரண்டையும் நிராகரித்து மீண்டும் ஊர்சுற்றியதால் இம் முறை இரண்டு மாதங்களுக்கு சிறைக்கு அனுப்புவதாகக் கூறினார். (ல)

## மின்னல் தாக்கி இருவர் மரணம்

பலாப்பழம் பறிப்பதற்காக மரத்தில் ஏறிய நித்தம்புவையைச் சேர்ந்த இருவர் மின்னலால் தாக்குண்டு மாண்டனர். (ல)

## கைதாயினர்

அநுராதபுரம், மே 26

அநுராதபுரம் புனித நகரில் உள்ள யாத்திரீகர் விடுதியொன்றில் இளம் பெண் ஒருவரும் ஆடவர், இருவரும் தனித்திருக்கக் காணப்பட்டதனால் பொலீசார் மூவரையும் கைது செய்தார்கள். இரண்டு ஆடவர்களுடன் இந்த இளம்பெண் மாத்தளைப் பகுதியிலிருந்து ஓடிவந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (24)

## இந்திய கத்தோலிக்கர் பாப்பரசரிடம் ஆலோசனை

பெங்களூர், மே 26

அரசாங்கத்தின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பற்றி தாங்கள் என்ன செய்ய வேண்டுமென உபதேசம் செய்தருளும்படி இந்தியாவில் உள்ள கத்தோலிக்கர்கள் பாப்பாண்டவரிடம் கோரியுள்ளனர்.

பங்காவில் நடந்த கத்தோலிக்க தேவாலயங்களின் மகாநாடொன்றிலேயே மேற்படி வேண்டுகோள் விடப்பட்டது.

குடும்பக் கட்டுப்பாட்டில் பாவிக்கப்படும் "ரிதம்" முறை உடலுறவு சமயத்தின் போது அதிக பலியைத் தருவதாக இருப்பதாகவும், தவிரவும் இம் முறை பலருக்கு விளங்குவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

பல டாக்டர்கள், நர்சுகள், சமூக சேவை அதிகாரிகள் குடும்பக் கட்டுப்பாட்டு பிரசாரங்களில் அதிருப்தியுடன் ஈடுபடுவதாகவும் அரசாங்க உத்தியோகத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவே இவர்கள் இத் தொழிலில் ஈடுபடுவதாகவும் மகா நாட்டில் கூறப்பட்டது.

மூன்று குழந்தைகளுக்கு அதிகமாக இருக்கும் தாய்மார்களுக்கு மாகாண அரசாங்கங்கள் சில வசதிகளை மறுப்பதாகவும் இதனால் கத்தோலிக்க மக்களே அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது (ல)

## புடவைக்கடையில் ரூபா 12,000 கொள்ளை

களனி, மே 26

பேலியகொடையில் உள்ள "விஸ்வா டெக்ஸ்டைலஸ்" கடையினுள் நுழைந்த திருடர் கோஷ்டி ஒன்று இரும்புப் பெட்டியிலிருந்த 12,000 ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ல)

## கார் விபத்தில் முன்னாள் ஏ. எஸ். பி.

கடந்த வெள்ளிக்கிழமையன்று வெள்ளவத்தை விகார லேன் சந்தியில் பாதசாரிகள் கடவையில் ரோட்டைக் கடக்கும்போது இளைப்பாறிய யாழ்ப்பாணம் ஏ. எஸ். பி. திரு ஐ. ஆர். ஆறுமுகத்தை டாக்சி ஒன்று மோதித் தள்ளியதாகக் கூறப்படுகிறது.

சிறு காயமடைந்த இவர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டார்.

வெள்ளவத்தைப் பொலீஸார் புலன் விசாரிக்கின்றனர். (ல)

## குடை திருடிய ஐ. ஆர். சிக்கு 18 மாதம்

பட்டப் பகலில் கையில் குடையுடன் சென்ற பெண் ஒருத்தியிடமிருந்து குடையைப் பறித்துக் கொண்டோடிய ஆர். அப்பாவி என்ற ஓர் ஐ. ஆர். சிக்கு, நீதிபதி திரு. நெத்தசிங்க 18 மாதக் கடுங்காவல் தண்டனையும் இரண்டு வருட பொலீஸ் கண்காணிப்பும் அளித்தார். (ல)

## ஜூன் 8-14 சுகாதார வாரம்

இவ் வருடம் ஜூன் மாதம் 8-ம் திகதி முதல் 14-ம் திகதிக்கு இடைப்பட்ட நாட்களை சுகாதார வாரமாகக் கொண்டாடுவது என சுகாதார இலாகா முடிவு செய்துள்ளது. (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தின் கோர தாண்டவம்

# தென் பகுதி கிராமங்கள் முற்ருகத் துண்டிப்பு!

## நிவாரணவேலைக்கு ஜரூர் ஏற்பாடுகள்

**இலங்கையின் தென் பகுதியில் வெள்ளத்தின் கொடூரத்தை ஆராய நேற்றுப்பகல் கட்டு நாயக்காவிலிருந்து அதிகாரிகளை ஏற்றிக்கொண்டு விசேட விமானம் ஒன்று சென்றது. பல கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டிருப்பதாக விமானத்தில் சென்ற அதிகாரிகள் தகவல் கூறினர்.**

நிலவள கங்கை, களுகங்கை கரைகளைச் சுற்றியுள்ள கிராமங்களே மேற்கூறிய பரிதாபத்துக்கு ஆளாகியிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது-

தெபுவான, பத்தேகமை, தெலிக்கடை ஆகிய பகுதிகளும் மாத்தறைக்கு வடக்கே உள்ள பகுதிகளும் வெளியூர்களிலிருந்து முற்ருகத் துண்டிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது-

சப்பிரகமுவா மாகாணத்தில் கிரியெல்லை, தொடம்பை, இரத்தினபுரி பகுதிகளில் வெள்ளக் கொடுமை தாங்கொணு கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது-

ஆனல் நேற்று, முன்னைய நாட்களை விட மழை குறைவாகப் பெய்ததாக காலநிலை அவதான நிலையம் அறிவித்தது- அதே சமயம் இன்னும் மூன்று நாட்களுக்கு தென் பகுதியில் கனத்த மழை பெய்யும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்-

பெருந்தொகையான உணவும், உடைகளும் வெள்ளப் பிரதேசங்களுக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டன- கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது- கொழும்பு மாநகர சபை நிவாரண வேலைகளை மேற்கொண்டுள்ளது-

இதுவரை வெள்ளப் பகுதிகளில் இரண்டு லட்ச ரூபா நிவாரண வேலைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது இன்னும் மூன்று லட்ச ரூபா மட்டுமே தங்களிடம் செலவு செய்ய மிகுதியாக உள்ளதாக அதிகாரிகள் கூறினர்-

இது இவ்வாறிருக்க, களு கங்கை, நில்வள கங்கை, ஜின் கங்கைப் பகுதிகளில் நெற்பயிர்கள் முற்ருக நாசமடைந்துள்ளதாக கமத்தொழில் இலாகா உணவு விவசாய அமைச்சுக்கு அறிவித்துள்ளது- இப் பகுதியில் இதுவரை சுமார் 350 குடும்பங்கள் வெள்ளத்தால் வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன- வெள்ளம் குறையும் அறிகுறிகள் காணப்படும் வரை, அபாயகரமான இடங்களிலுள்ள குடும்பங்களை வேறிடங்களுக்குச் செல்லும்படி கோரப்பட்டுள்ளது-

மாத்தறைப் பகுதியிலுள்ள பரதுவை, கட்டுவை, மாலிதுவ, அதுரெலிய, அத்துடுவ, துடாவ பகுதிகளிலுள்ள பெருபான்மையான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்-

அக்குரஸ்ஸைக்குச் செல்லும் சகல பாதைகளும் வெள்ளத்தில் அமிழ்ந்திருக்கின்றன- தெனியாய, மாத்தறை ரோட்டில் பரதாவையில் ரோட்டில் ஐந்து அடிக்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது-

நில்வளகங்கைக் கரையில் உள்ள 15,000 ஏக்கர் நெற்பயிர் முற்ருக நாசமடைந்துள்ளது- தபால், தந்திப் போக்கு வரத்து முற்ருக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது-

மாத்தறைப் பகுதியிலும் பல இடங்களில் இதே நிலைதான்- சுமார் 500-க்கும் அதிகமான குடும்பங்களுக்கு இலவச உணவு அளிக்கப்பட்டு வருகிறது- (ல)

### கராச்சியில் பிரதமர் டட்லி

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட பிரதமர் திரு- டட்லி சேனநாயக்கா நேற்று கராச்சி நோக்கி பயணமானர்-

மந்திரி திரு- சி- பி டி- சில்வாவுடன் பிரதமர் நேற்றுக் காலை கட்டுநாயக்கா விமானத்தளத்தை வந்தடைந்த போது ராஜாங்க அமைச்சர் திரு- ஜயவர்தன அவரை வரவேற்ருர்- "நான் தாமதித்து விட்டேனு?" என்றவாறு பிரதமர் வந்திறங்கிய சில நிமிடங்களில் வந்திறங்கினர் கவனர் ஜெனரல் திரு- விலியம் கொப்பல்லாவை-



### அஞ்சா நெஞ்சர் அப்துல் ரஸாக்

"குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்!"

அதிவீரராம பாண்டியன் என்னும் தமிழ் மன்னனின் வாக்கிற்கு எடுத்துக் காட்டாக இலங்கினன் மலேஷிய நாட்டில் பகாங் பிரதேசத்தின் அரசிளங் குமரன் ஒருவன். அவனது குடும்பத்தைக் கெட்ட காலம் சூழ்ந்தது. சின்னஞ் சிறுவனை அரசிளங் குமரன் காலிற் செருப்புக் கூட இல்லாது கைச் செலவிற்கு வாரம் இருபத்தைந்து சதத்துடன் பள்ளிக்கூடம் சென்று கற்றுவந்தான்.

இரண்டாவது உலக மகாயுத்தம் வந்தது; அரசிளங் குமரன் பிரிட்டிஷ் படையில் ஒரு கப்டனுகச் சேர்ந்தான். அக் காலத்தில் அரசிளங் குமரனுக்கு மேற்கல்வி பெற உபகார நிதி ஒன்று கிடைத்தது. லண்டன் சென்ற அரசிளங்குமரன் ஓராண்டுக் காலத்தில் பாரிஸ்டர் ஆனன்.

பாரிஸ்டரான அரசிளங் குமரன் தனது குடும்ப மாமூல் பிரகாரம் பகாங் பிரதேசத்தின் முதல் அமைச்சரானர்.

இம் முதல் அமைச்சர் எவரோ? அவர் தான் இன்றைய மலேஷிய நாட்டின் உதவிப் பிரதமரான, நாற்பத்தேழு வயதுடைய அப்துல் ரசாக் ஆவர்.

அப்துல் ரசாக் அவர்கள் 1956-ம் ஆண்டில் துங்கு அப்துல் ரஹ்மானுடன் சேர்ந்து ஐக்கிய தேசிய மலாயர் சம்மேளனத்தை உருவாக்கிப் பரிபூரண வெற்றி கண்டார். மலாய் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் அமைக்கப்பட்ட மந்திரி சபையில் அப்துல் ரஸாக் அவர்கள் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டார். 1957-ல் மலாய் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும் உதவிப் பிரதமர் ஆனர்.

இனக் கலவரத்தால் இன்று உதைக்கப்பட்டுள்ள மலேஷியாவின் தலைவிதி உப பிரதமரான அப்துல் ரஸாக் அவர்களின் கையிலே தங்கி இருக்கின்றது. அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களோ வரையறை இல்லாதவையாகும். எனினும் முதல் அமைச்சர் துங்கு அப்துல் ரஹ்மானுக்கு, தான் எல்லா வகையிலும் கட்டுப்பட்டவர் என்றே உப பிரதமர் அப்துல் ரஸாக் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்ருர்.

உப பிரதமர் அப்துல் ரஸாக் அவர்கள் உறுதியான மனேதிடம் உள்ளவர்; இரும்பு மனிதர்; எதற்கும் அஞ்சாதவர்; எவராலும் வளைக்க முடியாதவர். துங்கு இளகிய மனத்தவர்.


இனம்! இனம்! இனம்!



1- ஒரு லேடீஸ் கைக்கடிகாரம், மற்றும் ரூபா 200/-
2- ஒரு மணிப்புரி சாரி
3- ஒரு கைப்பையும் ஒரு பிளவுஸும் (Blouse)

தலைமுடிகள்

வாங்கும் ஒவ்வொருவருக்கும் மேற்படி பரிசுகள் கிடைக்க ஒரு அதிர்ஷ்டக் கூப்பன் அனுப்பி வைக்கப்படும்.

இன்றே எமது தலைமுடிகளுக்கு ஒரு ஆடர் கொடுங்கள் விலை ரூ. 8/50 வி- பி- பி- ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். தலைமுடிகளின் நீளம் 3½ அடி. நீடிய பாவனை, கழுவிப் பாவிக்கலாம் வேண்டிய தலையலங்காரம் செய்யலாம்.

அன்பளிப்பு:— தலைமுடிகளுக்கு ஆடர் கொடுக்கும் ஒவ்வொருவருக்கும் ★ ஒரு பிரேஸியர் (அளவு அனுப்பவும்) ★ ஒரு எம்ப்ராய்டரி புத்தகம் ★ ஒரு சோடி வளையல்கள் ஆதியன அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். ★ அத்துடன் 12 கொண்டைப் பின்களும் இனமாக அனுப்பப்படும். அதிர்ஷ்டசாலிகள் பெயர்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும். முதல் 20 விண்ணப்பக்காரர்களுக்கும் முறையே ஒரு மாலை அனுப்பப்படும்.

இன்றே உங்கள் ஆடர்களை அனுப்பி வையுங்கள்.

**The Manager "ANESCO AGENCIES" (TH)**
**191/1, High Level Road, Kirillapone, Colombo-6.**


இப்பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம்,5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12, (இலங்கை) வெளியிட்ட திகதி மே 27 1969.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo-12, Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org